[1981 மே 14

திரு. ஏ. சி. சண்முகம்:—தலைவரவர்களே, இரண்டு திரை அரங்குகளைக் கட்டு து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது தொடங்கப்படும். மாநகராட்சியே பெங்களூரில் உள்ள 'டிரைவ் இன் தியேட்டர், மாதிரி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்காக இந்த இரண்டு திரை அரங்குகளையும் 2 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. டிரைவ் இன் தியேட்டரைப் பொறுத்தவரை ஏற்கெனவே பொதுப்பணித் துறை மெரினா கடற்கரையில் கட்டுவதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறது. அப்படி பொதுப்பணித்துறை கட்டவில்லை என்றால் மாநகராட்சி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### கோம்பை ரங்கநாதர் கோவிலில் இருந்து ராமக்கல் மெட்டுவரை பாதை போடுதல்

*வினா எண். 1032—திரு ஆர். டி. கோபாலன்; திரு வே, இரா. ஜெயராமன்: மற்றும் திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட்டுவரை கேரள எல்லையிலுள்ள பாதையுடன் இணைக்கும் பாதை போட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு, ஆர், டி, கோபாலன்: தலைவரவர்களே, இந்த கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து போடப்படும் சாலைக்கு எப்போது வேலை தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை மொத்தம் 15 கிலோமீட்டர் நீளம் உள்ளது. இதற்கு மதிப்பீட்டுச் செலவு 70 இலட்சம் ரூபாய். இது 1981–82–வது மாவட்ட பெரும் சாலைகள் திட்டமாக இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வேலைகள் சீக்கிரமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் தொடங்கப்படும்.

### நாட்டாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 1033— திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா